IntSym 2019
9th International Symposium

# THE LIVELIHOOD PROBLEMS FACED BY THE PEOPLE: BASED ON THE GAYATHIRI VILLAGE OF THE THIRUKKOVIL DIVISIONAL SECRETARIAT

**K. Sujeeka[237] & K. Pathmalojini[238]**

Correspondence: vithulojini66@mail.com

ABSTRACT

Livelihood of the people is a means of securing the necessities of life.Sustainable livelihood means, livelihood is sustainable when it can cope with and recover from the stresses and shocks and maintain or enhance its capabilities and assets both now and in the future without undermining the natural resource base. It depended on every individual who develop their livelihood with the fundamental things such as natural, social, physical, human, financial and capital. In Sri Lanka after the war there are many development project implemented for the development of the peoples life. Any how it is a controversy whether these projects implemented in a right time or right place according to the people needs. The north and east people livelihood is very complicated. In that the livelihood of the Gayathiri village people under the Thirukkovil Divisional Secretariat of Ampara is in a backward position. In this village the huge number of families are without the basic needs. They face issues in their employment, shelter, transport, water and other infrastructure facilities. In their day to day life their facing lot of livelihood problems. So the Research Problem is why the Gayathiri village people are facing the livelihood related problems until now and also why their facing lot of difficulties in developing their livelihood.(G.S division, Thirukkovil). In this manner the objective of this research is identifying the livelihoodnatureof the Gayathiri village, the problems face by the Gayathiri village people, reasons behind these issues and the recommendation to these issues. The Data was collected in a qualitative method. It was collected from primary and secondary sources. Primary data was collected from the interview, observation and focus group discussion. Secondary data was collected from the books, newspaper and internet sources. Although the main livelihood activities of the Gayathiri village people are Chena cultivation, small scale cultivation and self-employment, the people in this village area are facing lot of challenges in their main livelihood activities. So the Sri Lankan government should implement the livelihood projects that should reach the needy, suitable and appropriate people to improve their livelihood.

**Keywords:** livelihood, poverty line, chena cultivation, self-employment, welfare policies

## அறிமுகம்

உலகின் சனத்தொகை இன்று மிக வேகமாக அதிகரித்துவரும் நிலையில் மக்கள் தேவைகளும் பல மடங்காக அதிகரித்துள்ளது. மனிதவளம் வரையரையின்றி அதிகரிக்கும்போது இயற்கை வளங்கள் வரையறையுடையனவாகக் காணப்படுகின்றன. இதனால் வளங்களை நுகர்வது தொடர்பில் போட்டிகள் ஏற்பட்டு அவை முரண்பாடுகளையும் அனர்த்தங்களையும் தோற்றுவிக்கின்றன. இந்நிலை மனிதனின் அன்றாட வாழ்விலும் அதனுடன் இணைந்த வாழ்வாதாரத்திலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் உணவு, உடை,

[237] Department of Sociology, South Eastern University of Sri Lanka.
[238] Department of Sociology, South Eastern University of Sri Lanka.

வாழிடம் என்பன இன்றியமையாதனவாக உள்ளன. பெரும்பாலான மக்களுக்கு உணவு, உடை கிடைக்கின்ற போதிலும் வாழிடம் என்பது அவர்களின் பொருளாதார நிலைக்கேற்ப கிடைக்கும் மட்டம் குறைவாகவே உள்ளது (சுபாஜினி, 2014).

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைகின்றது. மக்களுடைய வாழ்வாதாரமானது இயற்கை, சமூக, பௌதீக, மானிட மற்றும் நிதி ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது. நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதார உத்திகளும், சொத்துக்களும் வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தில் சுற்றுச்சூழல் பங்கினை மிகவும் ஆழமாக ஆராய்வதற்கான ஒருவழியை வழங்குகின்றது (சுபாஜினி, 2015).

யுத்தங்கள் மற்றும் அனர்த்தங்களும் மக்களது வாழிட நிலையை பாதிப்பதாக உள்ளன. இவை பல உயிரிழப்புக்களையும், உடமையிழப்புக்களையும் ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றன. உயிரிழப்புக்களை புதுப்பிக்க முடியதா நிலை காணப்பட்ட போதும் உடமையிழப்புக்கள் ஓரளவு புதுப்பிக்கக்கூடியதாக உள்ளன. அந்தவகையில் அனர்த்தங்களின் பின்னர் ஏற்படும் இழப்புக்களை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல மீள்வாழ்வளிப்பு திட்டங்கள் மூலம் நிறைவேற்றுகின்றன (சுபாஜினி, 2014).

அந்த வகையில் இலங்கையில் கடந்த 30வருடகால யுத்தமானது 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த நிலையில் பல்வேறு அழிவுகளையும் , இழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான அழிவுகளை பல அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அபிவிருத்தி திட்டங்கள் மூலம் ஓரளவுக்கு நிவர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது (சுபாஜினி, 2014).

இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் பொலநறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் வழங்கப்பட்டும் தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். பொருத்தமான நவீன உபகரணங்களுக்கான பற்றாக்குறை, நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான பற்றாக்குறை, பெரும்பாலான தொழில்களுடன் தொடர்புடைய அறிவு காணப்படாமை, முறையான விரிவாக்கல் சேவைகள் மற்றும் பொருத்தமான நிபுணத்துவ சேவைகள் இல்லாமை, நிதி மூலதனத்தின் பற்றாக்குறை மற்றும் வங்கிகளை அணுகுவதிலுள்ள சிக்கல்கள், சந்தைகள் தொடர்பாக உரிய நேரத்திற்கான தகவல்கள் கிடைக்காமை எனப் பல தொழில்சார் பிரச்சினைகளை வாழ்வாதார தொழிலாளர்கள் கூறுகின்றனர் (மாகாண தொழிற்கல்வி ஆணைக்குழு, 2016).

வாழ்வாதார அபிவிருத்தித் திட்ட நிகழ்ச்சிகள் மூலம் பல திட்டங்கள் இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ளன. மாதிரி கிராம அபிவிருத்தி திட்டம் அதில் ஒன்றாகும். அதன் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களில் 79 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது ஒவ்வொரு பிரிவுகளின் குறைந்தபட்ச வசதிகளுடனான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை தேர்வு செய்து அங்கு சிக்கலாக உள்ள குடிநீர், சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார உதவிகளை மேற்கொள்ளும் போது அதிகம் குறைபாடுள்ள அம்சங்கள் அதனை ஒட்டிய பாடசாலைகளில் இருக்கின்ற குறைபாடுகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. இதற்காக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் கீழ் இருக்கின்ற அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் ரூபா 1500 மில்லியன் வழங்கப்பட்டு பல்வேறு திட்டங்களுடாக செலவிடப்படுகிறது (தினகரன், 2019)

ஆய்வுப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் 717குடும்பங்கள் காணப்படுகின்றது. அதிகமான மக்கள் சேனைப்பயிர்ச்செய்கை, சிறுபயிர்ச்செய்கை மற்றும் சுயதொழில்கள் என்பவற்றை வாழ்வாதார தொழில்களாகக் கொண்டுள்ளனர். ஆடு, மாடு, கோழி என்பன வளர்ப்பு மிருகங்களாகக் காணப்படுகின்றன. பல்வேறு

நிறுவனங்கள் பல்வேறு உதவித்திட்டங்களை இப்பிரதேசத்தில் கொண்டுவந்துள்ள போதிலும் மக்களின் வாழ்வாதாரம் பின்தங்கியதாகவும், முன்னேற்றம் அடையாத நிலையிலும் காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

அபிவிருத்தி எனப்படுவது சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல், தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புக்கள் போன்ற அனைத்திலும் மக்கள் சிறந்த வளர்ச்சியை பெற்றிருப்பதாகும். தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரையில் காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்டு சுதந்திரம் அடைந்த நிலையில், இன்று வரை அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் நாடுகளாகவும், ஏனைய நாடுகளிடம் தங்கி நிற்கும் நிலையும், குறைவிருத்தி நாடுகளாகவுமே காணப்படுகின்றன. அந்த வகையில் இலங்கையை எடுத்துக் கொண்டால் 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று இன்று வரை முழுதளவில் அபிவிருத்தியை அடைந்து கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்கிய வண்ணமே காணப்படுகின்றது. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அபிவிருத்தி திட்டங்களை செய்து கொண்டு தான் இருக்கின்றது. ஆனால் தேவையுள்ள மக்களுக்கு தேவைப்படும் நேரத்தில் சிறந்த நலன்புரிகளாக சென்றடைகின்றதா? என்பதே ஆய்வின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. அந்த வகையில் காயத்திரி கிராம பிரதேச செயலகர் பிரிவிலுள்ள மக்கள் ஏன் இன்றுவரை வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பதே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது திருக்கோவில் பிரதேச செயலகர் பிரிவிலுள்ள காயத்திரி கிராம மக்களின் வாழ்வாதாரத்தைக் கண்டறிதல், அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் கண்டறிதல், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக உள்ளது.

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைகின்றதுடன் இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவில் நேர்காணல், நேரடி அவதானிப்பு மற்றும் இலக்கக்குழு கலந்துரையாடல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. நேர்காணலில் பிரதான தகவலாளிகளாக கிராம உத்தியோகத்தர்,திருக்கோவில் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஊர்மக்கள் உள்ளடங்கலாக பத்து பேரைக்கொண்ட நேர்காணல் இடம்பெற்றுள்ளது. அத்துடன் சேனைப்பயிர்ச் செய்கையாளர்கள், ஊர் பெரியவர்கள், நிலச் சொந்தக்காரர்கள், சுயதொழிலாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கி ஒரு இலக்கக்குழு கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலை தரவு சேகரித்தலில் திருக்கோவில் பிரதேச செயலகம், பிரதேச சபை, நூல்கள், சஞ்சிகைகள், இதழ்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பல்வேறுபட்ட ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள் உதவும் எனும் கண்ணோட்டத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக ஆய்வினைத் தெளிவுபடுத்தவும், ஆய்வினைச்

சிறந்த முறையில் வடிவமைக்கவும், ஆய்வு தொடர்பான மேலதிக அறிவினையும் பெற முடிந்தது.

சுபாஜினி,உ.(2014) என்பவரால்''மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டமும் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றமும்'' எனும் தலைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் கிராமம் பற்றிய சிறப்புப் பார்வையில் ஒழுங்குமுறையான வாழிடங்கள் இன்றி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இந்தியன் வீடமைப்புத் திட்டங்களின் குறைபாடுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகவும் வாழ்வாதாரத்தின் விருத்திக்கு அடிப்படையாகவும் காணப்படுகின்ற வாழிடம் பற்றி மாத்திரமே பேசப்பட்டுள்ளது.

சுபாஜினி,உ.(2015). என்பவரால் மேற்கொள்ளப்பட்ட *''மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகள்''* எனும் தலைப்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகர் பிரிவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வாழ்வாதாரம் என்றால் என்ன, ஒட்டுசுட்டான் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார பிரச்சினைகள், 2009 யுத்தத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திகள் போன்ற ஆய்வுக்கு தேவையான விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

அத்தோடு ஒட்டுசுட்டான் மக்களின் பிரதான தொழில் விவசாயமாகவும், வீட்டுத்தோட்டம், பயிர்ச்செய்கை, கோழி வளர்ப்பு, சுய தொழில்களாக பப்படம் , பற்பொடி, மிக்சர் போன்றவற்றையும் செய்கின்றதனை ஆய்வினூடாக அறிய முடிந்தது. ஆனால் ஆய்வுப் பிரதேசமான காயத்திரி கிராமத்தை பற்றிய எந்தவொரு விடயங்களும் குறிப்பிடப்படவில்லை.

சந்திரகுமார்,சா.(2011). என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ''*மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி''* எனும் தலைப்பில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகர் பிரிவிலுள்ள மாவடிவேம்பு -02 பிரதேசத்தை மையப்படுத்தி இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதார மூலங்களை இழந்த நிலையில் மக்களது வாழ்வாதாரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் வாழ்வாதார தொழில்களாக வீட்டுத்தோட்டம், சுயதொழில். கால்நடைவளர்ப்பு, மட்பாண்ட கைத்தொழில்கள் மற்றும் நெற்பயிர்ச் செய்கை காணப்படுகின்றன. இங்கு மக்களின் தொழில்களை தொடர்ந்து செய்வதில் ஏற்படும் பிரச்சினைகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புக்கள் போன்ற ஆய்வுக்கு தேவையான விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

நவவித்திஜா,ப. , சூசை, எ.எஸ்.(2014). என்பவர்களால் ''*வலிகாமம் தெற்கு கண்ணகி நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலை''* எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது நலன்புரி முகாம்களில் வாழும் மக்களின் குடிநீர், மலசலகூட வசதிகள், கல்வி, பொருளாதார நிலை, தொழில்கள், வருமானங்கள், குடும்பச் செலவுகள், குடியிருப்பு பிரச்சினைகள் என அனைத்தும் ஆராயப்பட்டுள்ளது. ஆனால் நலன்புரி முகாம் என்ற ரீதியில் மாத்திரமே காணப்படுகின்றதே தவிர ஒட்டு மொத்த சமூக மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் ஆராயப்படவில்லை.

உதயகுமார்,S.S, றெஜினோல்ட்,L.(2016). என்பவர்களால் ''*யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலை''* பற்றிய ஆய்வில் மக்களின் வாழ்வாதாரத்தில் யுத்தம் ஏற்படுத்தியுள்ள தாக்கமும், மக்களின் வறுமையும் எடுத்து நோக்கப்பட்டுள்ளது. அதாவது யுத்தத்தின் முன்னர் மக்களின் வாழ்வாதாரம் நல்ல நிலையில் காணப்பட்டுள்ளதுடன் யுத்தத்தின் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இடப் பெயர்வின் பின்னர் மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காக தங்கி வாழும் நிலை காணப்படுகின்றது என்றும்,

அரைவாசிக்கு மேற்பட்டோர் முழு வறுமையில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஆய்வுக்கு தேவையான அனைத்து விடயங்களும் கூறப்பட்டுள்ள போதிலும் ஆய்வுப் பிரதேசம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சமகளம்(2017). எனும் பத்திரிகையில் ''*மலையக மக்களின் பிரச்சினை*'' தொடர்பான கட்டுரைப் பகுதியில் மலையக மக்களின் பொருளாதாரம், வேலைவாய்ப்புக்கள், உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மை, கல்வியில் காணப்படும் சமமான வளப்பங்கீடு இன்மை, குறைவான சுகாதார வசதி மற்றும் போசாக்கு போன்றவற்றில் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டுள்ளது.

Rameez, Riswan &Lumna(2018). என்பவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ''*அளிக்கம்பை கிராம வனக்குறவர்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால்கள்*'' எனும் தலைப்பில் அமைந்த ஆய்வில் அளிக்கம்பை மக்கள் எதிர்நோக்கும் நீர்ப்பற்றாக்குறை, மின்சார வசதியின்மை, போக்குவரத்து சிரமம், வறுமை, சுகாதாரம் போன்ற பல பிரச்சினைகள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால்கள் எனும் ரீதியிலேயே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகளே அளிக்கம்பை மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையில் காணப்படும் இருபந்தைந்து நிர்வாக மாவட்டங்களில் ஒன்றான அம்பாறை மாவட்டத்திலே கிழக்கு கரையோரத்தில் திருக்கோவில் அமைந்துள்ளது. இது பொத்துவிலுக்கு 30km வடக்கிலும், கல்முனைக்கு 35kmதெற்கிலும் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட காயத்திரி கிராமமானது 717 குடும்பங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இக்கிராமத்தில் அதிகமாக தமிழ் மக்களே வாழ்கின்றனர். அபிவிருத்தியில் ஏனைய கிராமங்களைவிட மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இக்கிராமம் காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் அதிகமாக பயிர்ச்செய்கைகள் மூலம் தங்களது வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நலன்புரித் திட்டங்களை வழங்கியுள்ள போதிலும் மக்களால் போதியளவு முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. ஆனால் மக்கள் சளைக்காமல் தங்களால் இயன்ற தொழில்களை இன்றுவரை செய்துவருகின்றனர்.

**ஆய்வு முடிவுகளும், கலந்துரையாடல்களும்**

**நோக்கம் 1:** திருக்கோவில் பிரதேச செயலகர் பிரிவிலுள்ள காயத்திரி கிராம மக்களின் வாழ்வாதார நிலையினைக் கண்டறிதல்.

காயத்திரி கிராம மக்களின் வாழ்வாதாரமாக சேனைப்பயிர்ச் செய்கை மற்றும் சிறுபயிர்ச் செய்கை என்பன பிரதான தொழிலாக காணப்படுகின்றன. கிராம மக்களிடம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் படி பெரும்பாலான குடும்பங்கள் சேனைப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களில் சிலர் வீட்டுத்தோட்டம், விவாசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சுய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரும்பாலான குடும்பங்கள் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கோழி வளர்ப்பிலும் ஈடுபடுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்குடன் கூலிவேலை மற்றும் வீட்டு வேலைகளுக்கும் செல்கின்றனர். பெண்கள் வேலைக்கு செல்வது மட்டுமில்லாமல் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் சுயதொழில் முயற்சிகளிலும்(மிக்சர், முறுக்கு, காலை உணவு தயாரித்தல், வடைசெய்து விற்றல்) ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு சுயதொழில் முயற்சி மேற்கொண்டுள்ள போதிலும் அவர்களின் வாழ்வாதாரமானது திருப்தியான ஒரு நிலையில் இல்லை என்றும், இதற்கான

காரணம் குறைந்த வருமானம் கொண்ட தொழில்களும், வறுமை காரணமாக பெற்ற கடன் தொகைகளுமாகும் என காயத்திரி கிராம மக்களிடம் நேர்காணல்களை மேற்கொண்ட போது தெரிந்து கொள்ளக்கூடிய நிலை காணப்பட்டது.

இம்மக்களின் கருத்துப்படி தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படும் உதவிகள் போதாமல் இருப்பதாகவும், இவ்வுதவிகள் உரிய நேரத்தில் தமக்கு கிடைப்பதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் தமது வாழ்வாதாரத்தினையும் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய வகையிலேயே உதவித்திட்டங்கள் இருக்க வேண்டுமென குழுநிலை கலந்துரையாடல்களில் ஈடுபட்ட மக்கள் கேட்டுக் கொண்டார்கள்.

**நோக்கம் 2**: திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட காயத்திரி மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சினைகளும் அதற்கான காரணங்களும்.

ஆய்வுப் பிரதேசத்தில் மக்களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதில் பெரும் தடைகள் காணப்படுகின்றமை முக்கிய பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இங்குள்ள மொத்த சனத்தொகையில் 55% குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாதவர்களாக காணப்படுகின்றனர். தொழில் வாய்ப்புக்கள், வருமானம், மூலதனம் போன்றவை போதியளவு இல்லாமையும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.

பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு உதவித்திட்டங்களை இப்பிரதேசத்தில் கொண்டு வந்துள்ள போதிலும் மக்களின் வாழ்வாதாரம் பின்தங்கியதாகவும், முன்னேற்றம் அடையாத நிலையிலும் காணப்படுகின்றது. இப்பிரதேச மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மற்றும் அவதானிப்பின் படி பிரதான தொழிலாக சேனைப்பயிர்ச் செய்கை காணப்பட்ட போதிலும், இப்பயிர்ச் செய்கைக்கு போதியளவான மூலதனம் இன்மை, பொருத்தமான உபகரணங்கள் இன்மை, நிலமின்மை, நீர்ப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. உதவி வழங்கிய நிறுவனங்கள் அபிவிருத்திக்கான திட்டங்களை வழங்கியுள்ள போதிலும் அவை, முழுமையான வாழ்வாதார முயற்சிகளுக்கும், நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரத்திற்கும் போதுமானதாக இல்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

வாழ்வாதார உதவித் திட்டத்தில் ஆடு, மாடு, கோழி வளர்ப்புத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை பராமரித்து வளர்ப்பதில் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக இவற்றிற்கான உணவுகளை பெற்றுக் கொள்தல், வதிவிடங்களை அமைத்தல், நோய் ஏற்பட்ட காலத்தில் அதனை பராமரித்தல் போன்றவற்றில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

**முடிவுகளும் பரிந்துரைகயும்**

திருக்கோவில் பிரதேச பிரிவிற்குட்பட்ட காயத்திரி கிராம மக்களுக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக உதவிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் இன்றும் வாழ்வாதாரம் சார்ந்த குடிநீர், போக்குவரத்து, மின்சாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், தொழில், போன்ற அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். எனவே வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களது வாழ்வாதாரத்தினை உயர்த்தி, அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்தல் அபிவிருத்தி அமைச்சின் கடமையாகும். சேனைப்பயிர்ச் செய்கை, விவசாயம் போன்றவற்றிற்கு காணி, இயந்திரங்கள், நீர்வசதி போன்றவற்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். வட்டியில்லா கடன் வசதிகள், காப்புறுதி வசதிகளை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

காயத்திரி கிராம மக்களின் கிணறுகளில் சுத்தமான குடிநீர் இல்லாமல் காணப்படுகின்றது. எனவே மக்களுக்கு அடிதாங்கிகள் மற்றும் நீர்குழாய்களை ஏற்படுத்திக் கொடுத்தல் சிறந்தது. கோடை காலங்களில் நீர்ப்பற்றாக் குறையினை

நீக்குவதற்கு குளங்கள், கால்வாய்கள் போன்ற நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனரமைத்தல் வேண்டும். சுயதொழில் வாய்ப்புக்களை மேலும் அதிகரித்தல் வேண்டும். அத்தோடு கோழி, ஆடு, மாடு வளர்ப்புக்களுக்கு அதனை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

ஆய்வுப் பிரதேசத்தில் சுகாதார வசதிகளையும் அதிகரித்தல் அவசியமாகும். குறிப்பாக மலசலகூடங்கள் மற்றும் வெள்ளம் வரும் போது காணிகளில் தண்ணீர் தேங்கி நிற்காது ஓடுவதற்கான மாற்று வழி முறைகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் அமைத்து கொடுக்க வேண்டும். இத்தேவைகள் இன்றியமையாதவை என்பதால் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் காலம் தாழ்த்தாது செய்து கொடுத்தல் வேண்டும். அத்தோடு மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். கல்வி அறிவற்ற பாமர மக்களுக்கு தெளிவான முறையில் அவர்களுக்கு விளங்கும் விதமாக, வழங்கப்படும் உதவிகள் தொடர்பாக விபரித்துக் கூற வேண்டும். காயத்திரி கிராமத்தில் காணப்படும் வேலையில்லாப் பட்டதாரிகள் மற்றும் படித்து வேலைவாய்ப்பு இன்றி காணப்படும் இளைஞர்களுக்கு சிறு தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்தல் வேண்டும்.

ஒரு நாடு செழிப்படைய வேண்டுமானால் அந்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் செழிப்படைந்திருக்க வேண்டும். அந்த வகையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நலன்புரிகளை வழங்கும்போது சிறந்த பயனை அடைபவர்களுக்கு முதலில் உதவிகளை வழங்க வேண்டும். அத்துடன் வழங்கப்பட்ட உதவிகள் மக்களுக்கு போதுமானதா? எத்தனை வருடங்களுக்கு போதுமானது? மக்கள் உதவிகளைப் பெற்றுக் கொண்டு என்ன செய்கிறார்கள், என்பன போன்ற அனைத்து விடயங்களையும் கவனிக்க வேண்டும். ஒரு திட்டம் தோல்வியுற்றால் வேறு திட்டங்கள் காணப்பட வேண்டும். இவ்வாறு சரியான ஒழுங்கு முறைகள் பேணப்பட்டால் கிராமங்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர் கொள்ளத் தேவையில்லை. இலங்கையில் எத்தனையோ நலன்புரி அமைப்புக்களும், அமைச்சுக்களும் காணப்படுகின்றன. ஆனால் அவை சரியாக செயற்படுகின்றனவா? என்று பார்த்தால் கேள்விக்குறியாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சரியாகச் செயற்பட்டால் இப் பிரச்சினை ஏற்படாது.

## ACKNOWLEDGEMENT

இவ்வாய்வினை மிகவும் நேர்த்தியாகவும், சரியாகவும் தெளிவாகவும் செய்து முடிப்பதற்கு தரவுகளையும், தகவல்களையும் வழங்கிய திருக்கோவில் பிரதேச செயலாளர், கிராம சேவகர், திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவருக்குள் மனமார்ந்த நன்றிகள்.

## REFERENCE

Annual Performance report Account.(2016). Ampara District Secretariat.

Village Profile.(2013). Thirukkovil divisional secretariat.

சுபாஜினி,உ.(2014). "*மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டமும் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றமும்*".Proceedings of Jaffna University International Research Conference. Retrived from: PDF conf.jfn.ac.lk

சுபாஜினி,உ.(2015). "*மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகள்.*"Kalam jounal Vol.1X(1). PP 35 – 43. Retrived from: PDF www.seu.ac.lk>kalam>vo19

சந்திரகுமார்,சா.(2011). "*மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி.*"International Symposium, South Eastern University of Sri Lanka. Retrived from: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/1014.

நவவித்திஜா,ப. , சூசை, எ.எஸ்.(2014). "*வலிகாமம் தெற்கு கண்ணகி நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலை*" Jafna University International Research Conference. Retrived from: PDF conf.jfn.ac.lk

உதயகுமார்,S.S , றெஜினோல்ட்,டு.(2016). "*யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலை.* Proceedings of the Second ARC, FMC, SEUSL. Retrived from: PDF lk.one.un.org>uploads>2016.

தொழிற்கல்வி ஆணைக்குழு.(2016- 2020). "*மாகாண தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் வடமத்திய மாகாணம்.*" உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, கொழும்பு: 354.∴ 2இ எல்விட்டிகல மாவத்தை. Retrived from: www.tvec.gov.lk.2016/12

சமகளம்(2017). "*மலையக மக்களின் பிரச்சினை.*"Retrived from: www.samakalam.com

Rameez, A., Riswan, M and Lumna,N.(2018). "*அளிக்கம்பை கிராம வனக்குறவர்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால்கள்*".Retrived from:http://www.researchgate.net